ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீ ரங்கநாயகி ஸமேத ஸ்ரீ ரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ரங்கநாத திவ்யமணி பாதுகாப்யாம் நம:

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் அருளிச்செய்த

# ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்

## (28. ஸுபாஷித பத்ததி)



(உடையவர் போற்றிய நம்பெருமாளின் திருவடிகள்)

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

ஸ்ரீ அஹோபில தாஸன் க. ஸ்ரீதரன்

(Email: sridharan_book@yahoo.co.in)

821. கலாஸு காஷ்டாம் அதிஷ்டந் பூம்நே ஸம்பந்திநாமபி
பாதுகா ரங்க துர்யஸ்ய பரத ஆராத்யதாம் கதா

**பொருள் -** கலைகளில் தேர்ச்சி பெற்று அதன் உச்சத்தை அடைந்தவன், தன்னைச் சேர்ந்தவர்களுக்கு பெருமை உண்டாக்குபவனாக ஆகிறான். நாடகங்களை நிகழ்த்துவதில் வல்லவனாகிய ஸ்ரீரங்கநாதனின் பாதுகை, பரத சாஸ்த்ர நிபுணர்களால் (பரதனால் என்று சிலேடை) கொண்டாடப்படுகிறது.

822. ஸந்த: ஸ்வதேச பரதேச விபாக சூந்யம்
ஹந்த ஸ்வவ்ருத்திம் அநகாம் ந பரித்யஜந்தி
ராஜ்யே வநே ச ரகுபுங்கவ பாதரக்ஷே
நைஜம் ஜஹௌ ந கலு கண்டக சோதநம் தத்

**பொருள் -** சிறிதும் குற்றங்கள் இல்லாத தங்கள் கர்மங்களைப் பெரியவர்கள் தங்கள் ஊராக இருந்தாலும், வெளியூராக இருந்தாலும் கைவிடுவதில்லை. இது போன்று இராமனின் பாதுகையானது ராஜ்யத்திலும் கானகத்திலும் கண்டகசோதனம் என்பதைச் செய்தபடி இருந்தாள்.

**விளக்கம் -** கண்டகசோதனம் என்றால் முள் இல்லாமல் செய்வது ஆகும். கானகத்தில் முள் என்பது, ராஜ்யத்தில் சத்ருக்கள் என்று கருத்து.

823. ப்ரஹ்மாஸ்த்ரதாம் அதிஜகாம த்ருணம் ப்ரயுக்தம்
புண்யம் சரவ்யம் அபவத் பயஸாம் நிதிர்வா
ப்ருத்வீம் சசாஸ பரிமுக்த பதம் பதத்ரம்
கிம் வா ந கிம் பவத் கேளிவிதௌ விபூநாம்

**பொருள் -** ஸ்ரீராமனின் திருக்கரம் கொண்டு எறிந்த புல்லானது ப்ரஹ்மாஸ்திரம் ஆனது. அவனுடைய பாணத்திற்குப் பரசுராமனின் புண்ணியமும், ஸமுத்திரமும் (இரண்டுமே குறிபார்ப்பதற்கு இயலாதவை) இலக்காக நின்றன. அவனுடைய பாதுகைகள் திருவடிகளைக் காப்பதை விட்டு, இந்த உலகம் முழுவதையும் காப்பாற்றினாள். வல்லவர்களின் விளையாட்டில் எந்தப் பொருள்தான் எந்தப் பொருளாக மாறாது?

824. அந்யேஷு ஸத்ஸ்வபி நரேந்த்ர ஸுதேஷு தைவாத்
ப்ரஷ்ட: பதாத் அதிகரோதி பதம் பதார்ஹ:
ப்ராயோ நிதர்சயதி தத் ப்ரதமோ ரகூணாம்
தத்பாதயோ: ப்ரதிநிதீ மணிபாதுகே வா

**பொருள்** - தெய்வத்தின் ஸங்கல்பம் காரணமாக, அரச பட்டத்திற்குத் தகுதி படைத்த ஒருவன் அதனை நழுவவிட்டாலும், சிறிது காலம் கழித்து அடைந்துவிடுகிறான். இதனை ரகுவம்சத்தின் சிறந்தவனான இராமன் காண்பிக்கிறான். அவனுடைய திருவடிகளின் ப்ரதிநிதிகளான இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகைகள் உணர்த்துகிறாள்.

**விளக்கம்** – ஒருவனுக்கு ஒரு பதவி கிட்ட வேண்டும் என்றால், அந்தப் பதவியானது ஒருமுறை இல்லாவிட்டாலும் மற்றோரு முறை அவனைத் தேடி வந்துவிடும். இராமன் அரசபதவி ஏற்பது தடைபட்டாலும், அவன் தம்பிகள் உள்ள போதிலும் அவனது பாதுகைகள் அல்லவோ அரச பதவியைப் பிடித்தாள்?

825. சரணம் அநக வ்ருத்தே: கஸ்யசித் ப்ராப்ய நித்யம்
ஸகல புவந குப்த்யை ஸத்பதே வர்த்ததே ய:
நரபதி பஹுமாநம் பாதுகேவ அதிகச்சந்
ஸ பவதி ஸமயேஷு ப்ரேக்ஷிதஜ்ஞை: உபாஸ்ய:

**பொருள்** - குற்றம் இல்லாத, அவைவராலும் கொண்டாடப்படும்படியாக நடவடிக்கைகள் கொண்டவராக உள்ள ஒருவரின் திருவடிகளை அடைந்து, எப்போதும் உலகின் நன்மையைக் குறித்தும், உலகைக் காப்பாற்றுவது குறித்தும் சிந்தனை செய்தபடி ஒருவன் இருக்கக்கூடும். அவன் பாதுகைகள் போன்று அரசர்களுக்கு செய்யப்படும் மரியாதைகளையும், அரசர்களால் செய்யப்படும் மரியாதைகளையும் அடைந்து, அந்தந்த காலகட்டங்களில் புத்திமான்களால் உபாஸிக்கப்படுவான் (இராமனின் திருவடிகளை அடைந்து நின்ற பாதுகைகளுக்கு இந்த மரியாதை கிட்டியது).

826. ராமே ராஜ்யம் பிது: அபிமதம் ஸம்மதம் ச ப்ரஜாநாம்
மாதா வவ்ரே ததிஹ பரதே ஸத்யவாதீ ததௌ ச
சிந்தாதீத: ஸமஜநி ததா பாதுகார்ச்ய அபிஷேக:
துர்விஜ்ஞாந ஸ்வஹ்ருதயம் அஹோ தைவம் அத்ர ப்ரமாணம்

**பொருள்** - இராமனிடம் ராஜ்யம் இருப்பது என்பது தசரதரின் விருப்பமாகவும், ஜனங்களின் விருப்பமாகவும் இருந்தது. அப்போது அந்த ராஜ்யத்தை மாதாவான கைகேயி பரதனிடம் இருக்கவேண்டும் என்று கேட்டாள். ஸத்யத்தின் வழிமாறாத தசரதனும் அவ்விதமே செய்தார். ஆனால் அந்த நேரத்தில் யாராலும் எண்ணிக்கூட பார்க்க இயலாதபடி உயர்ந்த பாதுகா பட்டாபிஷேகம் நடந்தது. இந்த உலகில் அறிய இயலாத கருத்தைக் கொண்ட தெய்வமே செல்வாக்கு உடையதாகிறது.

827. நாதிக்ராமேச் சரணவஹநாத் பாதுகா பாதபீடம்
யத்வா ஆஸந்நம் பரம் இஹ ஸதா பாதி ராஜ அஸநஸ்ய
பூர்வத்ரைவ ப்ரணிஹிதம் அபூத் ஹந்த ராமேண ராஜ்யம்
சங்கே பர்த்து: பஹுமதிபதம் விக்ரமே ஸாஹசர்யம்

**பொருள்** - இராமனின் திருவடிகளை எப்போதும் தாங்கி நிற்கும் காரணத்தினால் திருவடியை வைக்கின்ற பீடத்தைக் காட்டிலும் பாதுகைக்கு உயர்வு இல்லை என்றாகிறது (காரணம் ஸிம்ஹாஸனத்தை விட்டுப் பாதுகைகள் ஸஞ்சார காலத்தில் புறப்பட்டாலும், திருவடியை வைக்கின்ற ஆஸனம் அங்கேயே உள்ளது). அது போன்று பாதுகை, ஆஸனபீடம் ஆகிய இரண்டிற்குள் ஸிம்ஹாஸனத்திற்கு மிகவும் நெருக்கமாக ஆஸனபீடமே உள்ளது. இப்படி உள்ளபோதிலும் இராமனால் பாதுகையிடமே ராஜ்யம் ஒப்படைக்கப்பட்டது. இது ஏன்? ஆஹா! விரோதிகளை அழிக்கின்ற காலத்தில் இராமனுடன் அவனை விடாமல் பாதுகை ஸஞ்சாரம் செய்து, அவனுக்கு உதவி செய்ததால், பாதுகைக்குக் கிட்டிய வெகுமதியே இதன் காரணம் என்று எண்ணுகிறேன்.

828. ப்ரதிபத சபலாபி பாதுகா
ரகுபதிநா ஸ்வபதே நிவேசிதா
ஸமஜநி நிப்ருத: ஸ்திதி ததா
பவதி குண: ச்ரியம் அப்யுபேயுஷாம்

**பொருள்** - அடிக்கடி ஸஞ்சாரம் செய்வதால் அசைந்தபடி பாதுகைகள் இருந்தாலும், இராமனால் தனது ஸிம்ஹாஸனத்தில் அமர வைக்கப்பட்டவுடன், அசையாமல் ஸ்திரமாக இருந்தாள். செல்வம் அடைந்தவர்களுக்கு குணம் வந்து விடுகிறது.

829. கதிஹேது: அபூத் க்வசித் பதே
ஸ்திதி ஹேது மணிபாதுகா க்வசித்
ந ஹி வஸ்துஷு சக்தி நிச்சயோ
நியதி: கேவலம் ஈச்வர இச்சயா

**பொருள் -** இரத்தினக்கற்கள் பதிக்கப்பட்ட பாதுகையானது ஓர் இடத்தில் (திருவடியில்) ஸஞ்சாரத்திற்கே காரணமாக உள்ளாள். அதே பாதுகை வேறோர் இடத்தில் (ஸிம்ஹாஸனம்) ராஜ்யத்தை அமர்ந்து காப்பாற்றுவதற்கான காரணமாக உள்ளாள். ஆக பொருள்களில் இந்தப் பொருள், இந்தச் செயலை மட்டுமே செய்யும் என்ற நியதி இல்லை. ஈச்வரனின் இச்சையினால் மட்டுமே இவ்விதம் நடக்கிறது.

830. அதரீக்ருத: அபி மஹதா
தமேவ ஸேவேத ஸாதரம் பூஷ்ணு:
அலபத ஸமயே ராமாத்
பாதக்ராந்தாபி பாதுகே ராஜ்யம்

**பொருள் -** மேலும் மேலும் உயர எண்ணுபவன், உயர்ந்த ஒருவனால் தாழ்வாக நடத்தப்பட்டாலும், அவனையே அண்டி வணங்கி நிற்கவேண்டும். பாதுகையானது இராமனின் திருவடிகளால் மிதிக்கப்பட்டாலும், ஒரு காலகட்டத்தில் இந்த இராமனின் ராஜ்யத்தையே அடைந்தாள்.

ஸ்வாமி வேதாந்த தேசிகன் அருளிச்செய்த
ஸ்ரீ பாதுகா ஸஹஸ்ரம்
ஸுபாஷித பத்ததி ஸம்பூர்ணம்

தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்


**Email:**sridharan_book3yahoo.co.in